**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 19.09.2025.**

| **Name : மாரியப்பன்** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) எதிரியை விபத்திற்கு முன்னர் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் எங்கு குடியிருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் மேச்சேரி G.H க்கு உட்புறமாக குடியுள்ளார். G.H க்கு உட்புறமாக உள்ள குடியிருப்புக்கு செல்ல வேண்டுமென்றால் விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் வழியாக தான் செல்ல வேண்டுமென்று சொன்னால் சரிதான். விபத்தில் இறந்தவர் என் உறவினரா என்றால் இல்லை.

2) விபத்தில் இறந்தவரின் மனைவி பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்த போது விபத்தில் இறந்தவரின் மனைவி ரேவதிக்கு தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். இறந்தவரின் மனைவி பெயர் ரேவதி என்ற விவரம் எப்படி தெரியும் என்றால் விசாரித்து தெரிந்து கொண்டேன். யாரிடம் விசாரித்தேன் என்றால் இறந்தவரின் மாமாவிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன்.

3) விபத்தில் இறந்தவர் யார் என்று தெரியாத நிலையில் இறந்தவரின் மாமாவை எப்படி தெரியும் என்றால் வேறு ஒரு நபர் மூலமாக தெரிந்து கொண்டேன். இறந்தவர் சுய நினைவுடன் இருந்தாரா என்றால் இல்லை. அந்த வேறு நபர் யார் என்பது குறித்து நான் போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால்

இல்லை. காவல் நிலையம் சம்பவம் நடந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 15 அடி தொலைவில் இருக்கும். காவல் நிலையமும், அரசு மருத்துவமனையும் ஒரே காம்போன்டில் உள்ளது என்றால் ஆமாம். எந்த ஆம்புலன்ஸ் மூலமாக நான் இறந்தவரை கொண்டு சென்றேன் என்றால் விநாயகா ஆம்புலன்சில் கொண்டு சென்றேன்.

4) பொதுவாக விபத்து நடந்தவுடன் விபத்தில் அடிப்பட்ட நபரை ஆம்புலன்சில் ஏற்றிச் செல்லும் போது சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் அளிப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எங்கு என் வாகனத்தை வைத்துக் கொண்டு நிற்பேன் என்றால் அரசு மருத்துவமனை எதிரே நிற்பேன். விபத்து நடந்து எவ்வளவு நேரம் கழித்து சென்றேன் என்றால் 10 நொடிக்குள் சென்று எடுத்து ஆம்புலன்சில் வைத்து மருத்துவமனைக்கு சென்றேன்.

5) 10 நொடிக்குள் இறந்த நபரின் விவரத்தை சுற்றுவட்டாரத்தில் விசாரித்து மனைவி மற்றும் உறவினர் பெயரை தெரிந்து கொண்டு அவர்களுக்கு செல்போன் மூலமாக தகவல் தெரிவித்துவிட்டு செல்ல வாய்ப்பில்லை என்றால் அவ்வாறு இல்லை. என்னை போலீசார் எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் என்னுடைய ஆம்புலன்ஸ் ஸ்டான்டில் வைத்து விசாரித்தனர்.

6) என்னை விசாரிக்கும் போது வேறு யாரை விசாரித்தார்கள் என்றால் ராகவன், ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்தனர். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து ராகவன், ராஜ்குமார் வந்தார்கள் என்றால் சம்பவயிடத்திலேயே இருந்தார்கள். விபத்தில் இறந்தவரின் உறவினர் சந்திரசேகர் என்பவருக்கு நான் ஏதாவது விபத்து குறித்து தகவல் கொடுத்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை.

7) ஆம்புலன்சில் யார் யார் உடன் வந்தனர் என்றால் அடிப்பட்ட நபர் மட்டுமே வந்தார். சந்திரசேகர் என்னுடன் ஆம்புலன்சில் உடன் வரவில்லை என்றால் ஆமாம். வழக்கிற்காக சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்கிறேன் என்றும் சந்திரசேகர் அவர் தான் சம்பவத்தை பார்த்து ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றதாக

சொல்லியுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் சம்பவயிடத்தில் இல்லை என்றும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 19.09.2025.**

| | |
|---|---|
| **Name : ராகவன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தனர். எங்கள் ஸ்டான்டில் வைத்து போலீசார் விசாரணை செய்தனர். என்னை விசாரணை செய்த போது மாரியப்பன், ராஜ்குமார் ஆகியோரை விசாரணை செய்தனர். எதிரி முருகேசன் எங்கு குடியிருக்கிறார் என்றால் G.H ல் உள்ள குடியிருப்பில் உள்ளார்.

2) எந்த வாகனம், எந்த வாகனத்தின் எந்த பக்கத்தில் மோதியது என்றால் மேச்சேரியிலிருந்து தொப்பூர் நோக்கி ஸ்கூட்டி சென்று கொண்டிருந்த போது தொப்பூரிலிருந்து மேச்சேரி நோக்கி சூப்பர் ஸ்பிளண்டர் வண்டி வந்த போது விபத்து ஏற்பட்டது. ஸ்கூட்டி வாகனம் சூப்பர் ஸ்பிளண்டர் வண்டி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் ஆமாம். ஸ்கூட்டியின் எந்த பாகம் சூப்பர் ஸ்பிளண்டர் வாகனத்தின் எந்த பாகத்தில் மோதியது என்றால் இடது பக்கமாக முன்புறம் மோதியது. நான் போலீசார் விசாரணையில் வண்டியின் பெயர் என்னவென்று சொல்லியுள்ளேன் என்றால் Hero Honda Super Splendor ஆகும்.

3) விபத்து நடந்து ஆம்புலன்சில் எவ்வளவு நேரத்தில் ஏற்றினார் என்றால் 10 முதல் 15 நொடிக்குள் ஏற்றினார். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் 20 மீட்டருக்குள் இருக்கும். விபத்து நடந்தவுடன்

போலீசார் சம்பவயிடம் வந்தார்களா என்றால் விபத்து நடந்து ஏற்றிச் சென்றவுடன் வந்தார்கள். பின்னர் மறுநாள் வந்து விசாரணை செய்தார்கள்.

4) ஆம்புலன்சில் யார் யார் சென்றார்கள் என்றால் ஆம்புலன்ஸ் ஓனர் சென்றார் மற்றவர்கள் யார் யார் சென்றனர் என்று எனக்கு தெரியாது. நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்த போதும் விபத்து நடந்தவுடன் நான் சென்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**